**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.91 /2023 P.W. 1 /LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. சுஜா** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. கைஜின் ஜோஸ் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.05.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். 22.10.2022 ம் தேதி எனது வீட்டில் நான் தூங்கிக் கொண்டிருந்த போது இரவு 02.45 மணி அளவில் நான் எனது விட்டின் கீழ்தளத்தில் உறங்கிக்கொண்டிருந்த போது மேல்தளத்தில் உடைக்கும் சத்தம் கேட்டது. பக்கத்து அறையில் மாமி உறங்கிக் கொண்டிருந்தார். மேல்தளத்தின் கதவை உடைத்து வீட்டினுள் இறங்கிய நபர் இன்று நீதிமன்றத்தில் அஜராகிஉள்ளார். 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் அது. **சாட்சி கையை காண்பித்து அடையாளம் காட்டுகிறார்.** நான் சத்தம் போட முயற்சித்த போது எனது வாயை மூடி எனது கிறாஸ் லாடருடன் கூடிய முறுக்குச்செயினை அறுத்து எடுத்தார்.

2. அவர் கையில் இருந்த கத்தியைக் காட்டி சத்தம் போட்டால் கொன்றுவிடுவதாக மிரட்டினார். அவருடன் வந்த பெண் தான் 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆவார். **சாட்சி கையை காண்பித்து அடையாளம் காட்டுகிறார்**. யாராவது வருவார்களா என்று பார்ப்பதற்காக வீட்டின் வெளியில் நின்றுக்கொண்டிருந்தார். என்னை மிரட்டிய பின்னர் இவருவம் இருசக்கர வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டார்கள். எனது உறவினர் ஆன்றணியை தொலைபேசி மூலம் தகவல் கொடுத்து வரவழைத்தேன். அவருடன் காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தேன். நீதிமன்றத்தில் காட்டப்படும புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

3. எனது நகை கிடைத்துவிட்டதாக போலீசார் சொன்னதை வைத்து நான் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மேற்படி நகையை பெற்றுக்கொண்டேன். மேற்படி **செயின் அ. சா.பொ.1 ஆகும். பஞ்சநாமா அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை - குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்ஆஜர். சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு**

**கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

நான் இரணியல் காவல்நிலையத்திற்குட்பட்ட இடத்தில் இன்டிரீயர் டிசைன் கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். அது வாடகை இடமாகும். மேற்படி காவல்நிலையத்தில் இருந்து இன்டிரீயர் டிசைன் சம்மந்தமாக நிறைய நபர்கள் வருவார்கள் என்றால் சரிதான். எனதுவீட்டில் கீழ்தளத்தில் நான் படுத்திருந்தேன். மேல் தளத்தில் ரூம் இருக்கிறது. மேற்படி முதல் தளம் 40 அடி உயரத்தில் இருக்கிறது என்று சொன்னால் - சரிதான்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என் உடம்பில் எதுவும் தொட்டாரா என்றால் வாயை பொத்திக்கொண்டார். என் வீட்டின் பின்பக்க கதவு பெட்ரூம் பக்கத்தில் உள்ளதா என்றால் கிச்சனில் உள்ளது. மேற்படி கிச்சன் கதவுக்கு மாடன் கீ உள்ளதா என்றால் இல்லை. சாதாரண கீ தான் உள்ளது. எங்கள் வீட்டில் ஏணி இப்போது இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த ஏணி 10 அடி உயரம் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் வீட்டின்முன்புற பின்புற கதவு எதுவும் திறந்திருந்தா என்றால் இல்லை. என் மாமியாரின் படுக்கை அறை கீழ்தளத்தில் உள்ளது.

3. நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1ல் ஒரு பெண்ணும் ஆணும் வந்தார்களா என்று குறிப்பிட்டுள்ளேனா - மேற்படி கற்றறிந்த வழக்கறிஞர் மேம்றபடி சாட்சியிடம் மேற்படி அ.சாஆ.1 ஆன புகார் மனுவை காண்பித்து கேட்கிறார் அதற்கு மேற்படி சாட்சி இல்லை என்று கூறுகிறார். நான் புகார் கொடுத்த பிறகு காவல்நிலையத்தார் வந்தார் என்றால் உடனே வந்துவிட்டார்கள். அவர்கள் ஆய்வாளரா உதவி ஆய்வாளரா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. ஆனால் சீருடையில் தான் வந்தார்கள். வந்து என்னிடம் விசாரித்தார்கள்.

4. மேற்படி போலீசார் வீட்டிற்கு வந்து மேற்படி 10 அடி ஏணியில் 40 அடி உயரத்தை பரிசோதித்தார்களா என்றால் - ஆம் பரிசோதித்தார்கள். மீண்டும் என்றைக்கு என்னை போலீசார் அழைத்தார்கள் என்றால் 31.12.2022ம் தேதி அழைத்தார்கள். மேற்படி தடயப்பொருளை எந்த கடையில் இருந்து வாங்கினார்கள்என்று எனக்கு தெரியுமா என்றால் - போலீசார் எனக்கு போண் செய்தார்கள். குளச்சல் காவல்நியைலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை பிடித்து வைத்திருப்பதாக சொன்னார்கள். நானும் எனது மாமியும் குளச்சல் காவல்நியைலம் சென்றுவிட்டோம். அங்கு ஆஜர்

குற்றம் சுமத்ததப்பட்ட நபர்களை காண்பித்தார்கள். அத்துடன் அவர்களிடம் பெற்றதாக என்னுடைய நகையையும் காண்பித்தார்கள். நான் என் வீட்டு ஏணியில் ஏறி பார்த்துள்ளேனா என்றால் - இல்லை.

5. காவல்நிலையத்தில் எனக்கு வேண்டபப்பட்ட நபர்கள் இருந்ததால் நடைபெறாதா சம்பவத்திற்கு நடைபெற்றதாக கற்பனையாக உருவாக்கப்பட்ட வழக்கில் ஒரு குற்றமும்செய்யாத இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராகநான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது செயின் காணாமல் போகவில்லை என்றும், என்னை யாரும் மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No.91 /2023 P.W. 2 /LW 2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. மரிய செல்வி** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. ஸ்டீபன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.05.2023.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை :</u>**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன்.அ.சா 1 எனது மருமகள். 22.10.2022 அன்று இரவு 01.45 மணிக்கு எனது மருமகள் அழுதுக்கொண்டு வந்து திருட்டுப் போய்விட்டதாக சொன்னார். கழுத்தில் இருந்த செயினை காணவில்லை என்றும் என்னை கொல்லப்பார்த்தார் என்றும் என்னிடம் கூறினார். அருகிலுள்ளவர்கள் வந்த பிறகு அவர்களுடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்கும்படி இரணியல் காவல்நியைலத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை - குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்ஆஜர். சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.</u>**

எங்கள் வீட்டில் உள்ள ஏணி என் உயரம் இருக்குமா என்றால் இல்லை. 10 அடி உயரம் இருக்கும்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்